DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC.39/2025

Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சேதுபாஸ்கரன் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present.)
19.02.2026 at 01.35 P.M.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது இளம்செம்பூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 2024ம் வருடம் கீழச்செல்வனூர் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக இருந்த போது 24.11.2024ந் தேதி காலை 10.45 மணியளவில் சார்பு ஆய்வாளருக்கு மதுபாட்டில்கள் விற்பனை செய்வது சம்மந்தமாக தகவல் கிடைத்தது. நானும், முதல் நிலைக்காவலர் 2402 திரு.கருப்பையா மேலக்கிடாரம் கிராமம் அருகே ரோந்து சென்ற போது மேலக்கிடாரத்தை சேர்ந்த குருசாமி மகன் மூக்காண்டி என்பவரின் பெட்டிக்கடையை சோதனை செய்த போது 180 மி.லி கொள்ளவுடன் கூடிய Golden Choice என்ற லேபிள் ஒட்டப்பட்ட மதுபாட்டில்கள் 7 இருந்தது. மேற்படி நபரின் விசாரிக்க எவ்வித உரிமமோ, அரசு அனுமதியோ இல்லாமல் சுயலாபம் கருதி மது பாட்டில்களை வைத்திருந்தது தெரியவந்தது. எனவே எதிரி மூக்காண்டியை மதுவிலக்கு சட்டப்படி கைது செய்தும், சொத்துக்களை அத்தாட்சி பிறப்பித்து அத்தாட்சியில் கைப்பற்றியும், தனிநபர்கள் யாரும் அத்தாட்சியில் கையெழுத்திட முன்வராததால் நானும், மு.நி.க –2402 திரு.கருப்பையாவும் கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1 ஆகும்.

3. பின்னர் எதிரி சொத்துக்கள் சகிதம் 11.45 மணிக்கு நிலையம் வந்து நிலையக்குற்ற எண். 54/2024 u/s. 4(1)(c) TNP Act ன் படி சார்பு ஆய்வாளர்

வழக்கு பதிவு செய்தார். நாங்கள் சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். இது தொடர்பாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் புகார்தாரர் எங்கள் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் என்றால் சரிதான். நாங்கள் ரோந்து சென்றது எந்த வாகனம் என்று சார்பு ஆய்வாளர் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். எதிரியின் கடை எந்த பகுதியில் அமைந்துள்ளது என்று நான் சார்பு ஆய்வாளர் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் மதுபாட்டில்கள் எந்த பையில் எந்த இடத்தில் இருந்தது என்று சார்பு ஆய்வாளர் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு கிளம்பினோம் என்றால் காலை 10.45 மணிக்கு கிளம்பினோம். சம்பவ இடத்திற்கு அருகில் நிறைய பெட்டிக்கடைகள் உள்ளது என்றால் சரிதான்.

அங்கே தனிநபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். அத்தாட்சியானது சம்பவ இடத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை அந்த இடத்தில் அழித்தோம் என்றால் சரியல்ல காவல் நிலையத்தில் கொண்டு வந்தோம். கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்கள் என்ன லேபிள் ஒட்டப்பட்டது என்றால் Golden Choice என்ற லேபில் ஒட்டப்பட்டிருந்தது. வழக்கு சம்பவத்தின் முன்னர் எவ்வளவு நாட்கள் கீழச்செல்வனூர் காவல்நிலையத்தில் பணிபுரிந்தேன் என்றால் சுமார் 1 வருடமாக பணிபுரிந்தேன். சம்பவம் நடந்தாக சொல்லப்படும் மேலக்கிடாரத்தில அரசு மதுபானக்கடை உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் அத்தாட்சியானது காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கில் காண்பிக்கப்பட்ட மதுபாட்டில்களானது வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேலகதிகாரியின் உத்தரவின் பேரில் புள்ளிவிவர கணக்கிற்காக பொய்யான வழக்கு என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம்

இல்லை என்று சொன்னால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி